


அக்கோரா கஸ்டியக் கட்சியை ஊத்திக் கழுவி மூடிவிட்டார்கள். சாது அரசியல் இனி ஒத்துவராது என்று தெரிந்துவிட்டது. ஆனாலும், தேர்தல் வருகிறதே? சீட்டுகள் முக்கியமாயிற்றே? பிடிக்காது போனாலும் உயரத்தூக்கிய தாலிக்குக் கழுத்து நீட்டித்தான் ஆகவேண்டும். எனவே அதிரடியாக, தேர்தலுக்குப் பதினைந்து நாள் முன்னதாக இன்னொரு கட்சி ஆரம்பிப்பது என்று முடிவு செய்தார்கள்.

வேறு வழி தெரியவில்லை அவர்களுக்கு. பாஸ்க் மக்களின் கனவு தேசத்தை சிருஷ்டிப்பது லேசுப்பட்ட வேலை அல்ல. பிச்சுவா காண்பித்தோ, வெடிகுண்டு வீசியோ பெற்றுவிடமுடியாது. மூன்றே வழிகளில்தான் இது சாத்தியம். ஒன்று, அதிரடி கெரில்லா போர்முறை. அரசாங்கத்துடன் நேருக்கு நேர் நின்று உதார் விடுவது. மோதுவது. இது சாத்தியமில்லை. தீவிரவாதி என்று உடனடியாக பிராண்ட் குத்திவிடுவார்கள். தேடிப்பிடித்து நசுக்கிவிடுவார்கள். நிறைய கெட்ட பெயர் கிடைக்கும். காரியம் கைகூடாது.

இரண்டாவது வழி, சாத்வீகமான போராட்டம். 'அன்புள்ள பிரதமருக்கு, இத்துடன் எங்கள் தனித்தேச கோரிக்கையை இணைத்துள்ளோம். எங்கள் தெருவில் உள்ள அத்தனை பேரும் கையெழுத்துப் (சிலர் கைநாட்டு) போட்டிருக்கிறார்கள். தக்க முறையில் பரிசீலித்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். இவண், அவன்.' என்றெல்லாம் எழுதிப்போட்டுவிடவேண்டியது. அரசாங்கப் பிரமுகர் யாரையாவது சந்திக்க நேர்ந்தால், "ஐயா, ஒரு கோரிக்கை அனுப்பியிருந்தேன் பார்த்தீர்களா?" என்று பம்முவது. சரிப்பட்டு வரவில்லையென்றால், உண்ணாவிரதம், அமைதிப் பேச்சுவார்த்தை, காரடையான் நோன்பு என்று என்னென்னவோ செய்வது. ம்ஹூம். சான்ஸே இல்லை. இருக்கும் இடம் தெரியாமல் போய்விடவேண்டியதுதான். சாத்வீக சமாசாரங்களுக்கு மூட்டை கட்டி வெகு காலம் ஆகிவிட்டது.

மூன்றாவது வழி, கட்சி அரசியல். அமர்க்களமான, அட்டகாசமான கட்சி ஒன்றை ரிப்பன் வெட்டி ஆரம்பித்துவிடவேண்டியது. பிரியாணி, பிட்ஸா, பைசா எது கேட்டாலும் கொடுத்து, வாக்காளர்களை ஈர்ப்பது. பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் நாடாளுமன்றத்தில் வெற்றி பெற்று, தேவைப்படும் சட்டத்தை இயற்றிக்கொள்வது. அஸ்க்கு புஸ்க்கு, பாஸ்க் எல்லாம் தரமாட்டேன் என்று யாரும் அழிச்சாட்டியம் செய்ய முடியாது.

இந்த மூன்றில், கடைசி வழி இ.டி.ஏ.வை வெகுவாக வசீகரித்தது. எதற்கு விட்டுவைப்பானேன்? ஓர் ஆட்டம் ஆடித்தான் பார்ப்பது. அதனால்தான் அக்கோரா கஸ்டியக் கட்சியை ஆரம்பித்தார்கள். தோல்விதான். ஆனால், அந்தத் தோல்வி அவர்களைப் பெரிதாக பாதிக்கவில்லை. எத்தனையோ குண்டுகள் கடைசி நேரத்தில் வெடிக்காமல் காலை வாரிவிட்டதில்லையா? 'பச்சை சட்டை, கறுப்புக் கண்ணாடி ஆசாமியைக் கடத்தி வா' என்று உத்தரவிட்டால், பச்சைக் கண்ணாடி, கறுப்புச் சட்டை ஆசாமியை சில கமாண்டோ சபாபதிகள் கடத்தி வரவில்லையா? அப்படி நினைத்துக்கொள்ள வேண்டியதுதான். அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!

காசா பணமா? கட்சிதானே. பேங்க் அக்கவுண்ட் ஓப்பன் செய்வதைவிட சுலபமான வேலை. அரசியல் சாயம் பூசிக்கொள்ளாமல் பெரிய காரியங்களை நடத்த முடியாது. பிடிக்கிறதோ, பிடிக்கலையோ நடத்தித்தான் ஆகவேண்டும். பதினைந்து நாட்களில் தேர்தல். தலைக்கு மேல் கத்தி. கத்திக்கு மேல் வெடிகுண்டு. தலைமை ஆசாமிகள் உட்கார்ந்து பேசினார்கள். நல்ல பெயர் ஒன்று உடனே வேண்டும். யோசனைகள் சரமாரியாகப் பறந்து வந்தன. மக்கள் கட்சி, புதிய மக்கள் கட்சி, புரட்சிப் படை, புதிய புரட்சிப் படை, மக்கள் முன்னேற்ற மன்றம், பாயும் சிங்கம், பதுங்கும் நாகம். இன்னபிற. ஜாக்கி சான், ஜெட் லீ, சீனப்பட டைட்டில்களை அநாயாசமாகத் தூக்கிச் சாப்பிடும் பெயர்கள். ஆனால், எதுவொன்றும் யாருக்கும் பிடிக்கவில்லை. திருப்தியில்லை.

டிக்ஷனரி தேடாமல் சொன்னவுடன் பளிச்சென்று புரியவேண்டும். நல்ல பெயர். முடிந்தவரை சிம்பிளாக, சிக்கென்று இருக்கவேண்டும். புரட்சி என்று வரவேண்டும். இப்போதெல்லாம் எல்லோருக்கும் புரட்சி என்றால் பிடிக்கிறது. இனிஷியல் போல் கூடக்கூட சேர்த்துக்கொள்கிறார்கள். கிடக்கட்டும். பிறகு, மக்களுக்கான கட்சி என்று வெளிப்படையாகத் தெரியவேண்டும். குறிப்பாக, உழைக்கும் மக்கள், ஏழை மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள். இவர்களை ஈர்க்க முடிந்தால் போதும். நாடாளுமன்றம் நம்முடையது. நாளை நமதே. எந்த நாளும் நமதே.

அரை நாள் வீணான பிறகு, ஒரு பிரகஸ்பதி திடீரென்று கைகளை உயர்த்தினார். ‘பேசாமல், கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைத்துவிடலாமா?’

‘ஆ, இதுதான், இதுதான், இதேதான். கம்யூனிஸ்ட் கட்சி. சபாஷ், அருமை, பிரமாதம்.’ இருபதுக்குப் பதினைந்து தொகுதிகள் ஜெயித்து விட்டது போல் அப்படியொரு பிரகாசம் அத்தனை பேர் முகங்களிலும். ‘மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் எல்லாம் வேண்டாம். அது இ.டி.ஏ.வின் சொத்து. இது வெறும் கம்யூனிஸ்ட் கட்சி. போதும்.’

ஆனால், அத்தனை பேருக்கும் சில சந்தேகங்கள் இருந்தன. கம்யூனிஸம் என்றால் சின்னத்திலாவது ஆயுதம் இருந்தாகவேண்டுமே? தடை செய்துவிட மாட்டார்களா? தேர்தலில் போட்டியிடக்கூடாது என்று தடைவிதித்து விட்டால்? தவிரவும் ஒரு திடீர் கம்யூனிஸ்டு கட்சிக்கு சீனாவிலிருந்தோ, க்யூபாவிலிருந்தோ ஏதாவது எதிர்ப்பு வந்தால்?

நான்கைந்து போன் கால் செய்து, அப்படியெல்லாம் நடக்காது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி என்னும் பெயரை, இன்னமும் மெருகேற்றினார்கள். Communist Party of the Basque Lands. பாஸ்க் தேசத்து கம்யூனிஸ்ட் கட்சி. ஸ்பானிய மொழியில் இதன் அசல் பெயர் Euskal Herrialdeetako Alderdi Komunista. சுருக்கமாக EHAK.

பெயர் ரெடி. உறுப்பினர்கள்? அதுவும் கம்யூனிசம் தெரிந்த உறுப்பினர்கள்? முப்பது நாள்களில் கம்யூனிஸம் கற்றுக் கொள்ளுங்கள் என்று யாராவது புத்தகம் எழுதியிருக்கிறார்களா? பிளாட்ஃபாரக் கடை எதிலாவது கிடைக்குமா?

விசாரித்தார்கள். சில அடிப்படைப் புத்தகங்கள் இருக்கின்றன என்று கேள்விப்பட்டு, உடனடியாக வரவழைத்தார்கள். மிரண்டேவிட்டார்கள். கட்டுக்கட்டாகப் புத்தகங்கள். மார்க்ஸ், ஃபிரெட்ரிக் எங்கெல்ஸ், லெனின், மாவோ. பொருள்முதல் வாதம். புடலங்காய் சாதம். புத்தகத்தின் தலைப்புகளே மிரள வைத்தன. ஓர் அட்சரம் கூட பாஸ்க் அப்பாவிகளுக்குப் புரியாது என்று தோன்றிவிட்டது. பணவீக்கம். உலகச்சந்தை. நிதி ஆதாரம். போல்ஷ்விக். மென்ஷ்விக். மூன்றாம் அகிலம். நான்காம் அகிலம். சே எல்லாம் பண்டிதர்களுக்கானவை. பாமரர்களுக்கு ஓர் இலக்கியமும் இல்லையா? மூட்டையை அப்படியே கட்டி, பரணில் ஏற்றிவிட்டார்கள்.

இதெல்லாம் சரிப்படாது. கட்சிக்கு ஒரு பெயர். அது பாஸ்க் கம்யூனிஸ்டு கட்சி. அவ்வளவுதான். அடுத்து, லோகோ. கம்யூனிஸம் என்றால் சிவப்பு. EHAK என்னும் பெயர் கொட்டைப் பாக்கு போல் பெரிதாக இருக்கவேண்டும். சிவப்பில் வெள்ளை நன்றாக உட்காரும் என்பதால் சிவப்பு பேக்கிரவுண்டில் வெள்ளை எழுத்துகளைப் பொறித்துவிடலாம். படம்? சுத்தியல் போட்டுப் பார்த்தார்கள். ஒத்துவரவில்லை. சரி, நட்சத்திரம் போடலாம் என்று போட்டுவிட்டார்கள். கொஞ்சம் பெரிய சைஸில். கவர்ச்சியான லோகோ ரெடி.

'இந்தாப்பா, இங்கே வா. இதுதான் பெயர். உடனடியாக இதைப் பதிவு செய்துவிட்டு வா. எங்கே யாரிடம் என்றெல்லாம் தெரியாது. யெல்லோ பேஜஸ் எடுத்துப் பார்' தெரியும். தேர்தல் கமிட்டி ஏதாவது இருக்கும். வரும் தேர்தலில் கலந்துகொள்ளப்போகிறோம் என்று சொல். முறைப்படி செய்ய முடியாது என்று யாராவது முறைத்தால், பெட்டி கொடு. இல்லையென்றால், கையை வெட்டி எடு. முடிந்தவுடன், ஒரு போன் செய்.'

அப்போதைக்கு அப்போதே பிரிண்டரை அழைத்தார்கள். 'இதுதான் லோகோ. சிவப்பு நன்றாக வரவேண்டும். நட்சத்திரமும், EHAK பெயரும் வெள்ளையில் இருக்கட்டும். ப்ரூஃப் எடுக்க எல்லாம் நேரமில்லை. உடனடியாக பிரிண்டிங்கை ஆரம்பித்துவிடு. கொடியில் பொறிக்கவேண்டும். போஸ்டர் ஒட்டவேண்டும். வாகனங்களின் பின்னால் ஒட்ட வேண் டும். தொப்பி, டீ ஷர்ட், ஜீன்ஸ் பேண்ட், மணிபர்ஸ் எல்லாவற்றிலும் லோகோ அட்டகாசமாக உட்காரவேண்டும். தப்பு வந்தால், தொலைத்துவிடுவேன், தொலைத்து.'

மறுநாளே, கொஞ்சம்போல் கொடிகள் வந்து சேர்ந்தன. குண்டர் படை தொண்டர் படையாக உருமாறியிருந்தது. துப்பாக்கியை இடுப்பில் செருகிக்கொண்டு, கொடி ஏந்த ஆரம்பித்தார்கள். கோணி மூட்டைகளில் லவுட் ஸ்பீக்கர்கள் தருவிக்கப்பட்டன. இ.டி.ஏ. கொடுத்த ஸ்டேஷனரி லிஸ்டைப் பார்த்து ஆயுத சப்ளை ஏஜெண்டுகள் திகைத்துப் போனார்கள். என்ன ஆச்சு இந்த இ.டி.ஏ.வுக்கு? சணல் கயிறு, காகிதம், கொடிக் கம்பு, உருட்டுக்கட்டை, கோந்து என்று விவஸ்தையில்லாமல் கண்டதைக் கேட்கிறார்களே.

அடுத்த இருபத்தெட்டு மணி நேரத்தில் எல்லாம், எல்லாம் வந்து சேர்ந்தன. கட்சியின் பெயரை ரெஜிஸ்தர் செய்தாகிவிட்டது. லோகோ அமர்க்களமாக பிரிண்ட் ஆகி சுடச்சுட வந்து இறங்கிவிட்டது.

டூவீலர், கார், டாக்ஸி, ரயில் வண்டி என்று கண்ணில் தென்படும் அத்தனை வாகனங்களிலும் கட்டுக் கட்டாக நோட்டீஸ்களை வைத்து அனுப்பி வைத்தார்கள். மறுமுனையில் உள்ள இ..டி.ஏ. ஆட்கள் கட்டைப் பிரித்து, மளமளவென்று விநியோகம் செய்தார்கள். பார்க்கும் இடங்களில் எல்லாம் ஆப்பிள் நிற சிவப்பு போஸ்டர்களை ஒட்டினார்கள். ஹோர்டிங், நியான் விளக்குகள் எல்லாம் பொருத்தவேண்டும் என்று ஆசைதான். ஆனால், அவகாசமில்லை.

அடுத்து பிரசாரம். வாடகைக்கு வேன்களைப் பிடித்தார்கள். டாப் கவரை திறந்துவைத்துவிட்டு, முன்னால் மைக் பொருத்திக் கொண்டார்கள். நேற்றுவரை, குண்டு வைத்துக் கொண்டிருந்த ஒரு குண்டு பாஸ், இரு கைகளையும் கூப்பியபடி, வாய் நிறைந்த புன்னகையுடன் நகரை வலம் வர ஆரம்பித்தார்.

எப்படி பிரசாரம் செய்யவேண்டும், என்ன சொல்லி பிரசாரம் செய்யவேண்டும் என்பது பற்றிய தெளிவான வரையறை விரைவில் உருவாக்கப்பட்டது. பேச்சாளர்களுக்கு அச்சடித்த காகிதங்கள் விநியோகிக்கப்பட்டன. 'என் அன்பிற்கினிய வாக்காளப் பெருமக்களே, இது உங்கள் கட்சி. உங்களுக்கான கட்சி. உங்கள் நலனைப் பாதுகாக்கும் கட்சி. இமைப்போதும் சோராமல், உங்களுக்காகப் போராட நாங்கள் தயாராக இருக்கிறோம். நடைபெறும் தேர்தலில் நாங்கள் அமோக வெற்றி பெற உங்கள் ஆதரவும் அன்பும் தேவை.'

ம்ஹூம். காதில்கூட வாங்கிக்கொள்ளாமல் நகர்ந்துவிட்டார்கள் மக்கள். கவலையுடன் கூடிப் பேசினார்கள். என்ன சொல்லிப் பிரசாரம் செய்வது? எப்படி ஈர்ப்பது இந்தப் பாழாய்ப் போன மக்களை? விடை கிடைத்தது. பாஸ்க். எந்த நோக்கத்துக்காக பாடுபடுகிறோமோ, அதைச் சொல்லியே ஆதரவு திரட்டினால் என்ன?

ராவோடு ராவாகப் புதிய கோரிக்கை ஒன்றைத் தயார் செய்தார்கள். சுதந்திர பாஸ்க் பிரதேசம். தன்னிச்சையான தனி அரசாங்கம். எல்லையில்லா சுதந்திரம். புதிய வேலை வாய்ப்புகள். இலவசக் கல்வி. வீட்டு வசதிகள். பாஸ்க் மொழி அரசாங்க மொழியாக மாற்றப்படும். பாஸ்க் மொழி பேசும் மக்களுக்கு அரசாங்கப் பதவிகள். பாஸ்க் தேசத்து வளங்கள் அத்தனையும் பாஸ்க் மக்களுக்கு மட்டுமே. இன்னும் என்னென்ன வேண்டுமோ அத்தனையும் கிடைக்கும். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். ணிபிகிரிக்கு ஆதரவு அளிக்கவேண்டும்.

இந்தப் பிரசாரம் ஓரளவுக்கு நன்றாகவே வேலை செய்தது. 'புதியவர்கள். அதிரடியாக ஏதோ செய்யப் போகிறார்கள்' என்று பரவலாக மக்கள் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். காவல்துறை குழம்பிப்போய் நின்றது. யார் இவர்கள்? ஸ்பெயினில் கம்யூனிஸ சித்தாந்தமா? புரியவில்லையே. பாஸ்க் தேசம் என்று வேறு கேட்கிறார்களே. சரி பார்த்துக்கொள்ளலாம்.

தேர்தல் நல்லபடியாக நடந்து முடிந்தது. கை,கால் நகங்களை எல்லாம் கடித்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தது இ.டி.ஏ.

ரிசல்ட் வந்து சேர்ந்தது. மொத்தம் 9 சீட்கள் கிடைத்தன. பாஸ்க் கம்யூனிஸ்டு கட்சிக்கு ஆதரவாகக் கிடைத்த வாக்கு சதவிகிதம் 12.44.

அன்றே, தலைமை முடிவெடுத்துவிட்டது. பொருள் முதல்வாதம், கருத்து முதல்வாதம், எதுவும் இனி சரிப்பட்டு வராது. தீவிரவாதம்தான். அது ஒன்றுதான். அது போதும்.